செ.கு.எண் :- 197. நாள் 27-05-12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 27.5.2012

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், இரும்பொறை கிராமம், மஜரா அம்மன்புதூரைச் சேர்ந்த திரு. பழனியப்பன் என்பவர் 26.5.2012 அன்று காட்டுயானையால் தாக்கப்பட்டு, சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த பழனியப்பன் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான பழனியப்பன் அவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வனத்துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு :-

இயக்குனர், செய்தி மக்கள் தொடர்புத்துறை தலைமைச் செயலகம்
சென்னை.